# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி சார்பாக மன்றக்கூட்டம் தனி அலுவலரால் 31.05.2019ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. கீழ்கண்ட பொருட்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி

## பொருள்–676

தேவகோட்டை நகராட்சி அழகப்பா ஊரணி பூங்கா ஓர் ஆண்டுக்கு பராமரிப்பு பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.407, நாள்.08.02.2018ல் மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரன்ஸ் ஏஜென்ஸி–காரைக்குடி நிறுவனத்திற்கு ஒப்படைக்க அனுமதிக்கப்பட்டது. இதன்படி 05.04.2018 முதல் இந்நிறுவனம் பணி மேற்கொண்டு வருகிறது. தற்போது 05.04.2019 ஓர் ஆண்டு பணிக்காலம் நிறைவடைகிறது. இப்பூங்கா பராமரிப்பு பணி தொடர்ந்து நடைபெற ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும். ஆனால் மார்ச் 10 முதல் மே 19 முடிய தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. எனவே மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகோரி பணி உத்தரவு வழங்கும் வரை மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளயரன்ஸ் ஏஜென்ஸி, காரைக்குடி நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள விலைவிகித்தில் 31.07.2019 முடிய பணி நீட்டிப்பு செய்திடவும் இதற்கான திருத்திய மதிப்பீடு ரூ.2,00,000/–க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–** 1)அனுமதிக்கலாம்

2)தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் ஏற்கனவே பணி மேற்கொண்ட நிறுவனத்திற்கு 31.05.2019 வரை பணி மேற்கொண்டதையும் 31.07.2019 வரை பணி நீட்டிப்பு செய்யவும் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.676, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்–677

தேவகோட்டை நகராட்சி டாடா சுமோ வாகனம் எண்.TN63 T 3316–க்கு 2019–2020ம் ஆண்டுக்கு இன்சூரன்ஸ் பாலிசி புதுப்பிக்க வேண்டியுள்ளது. இதற்கு காப்பீடு பிரிமியத்தொகை ரூ.12188/– யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்க்கு செலுத்தி பாலிசி புதுப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.677, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–678–**

பாராளுமன்ற தேர்தல் 18.04.2019 அன்று நடைபெற்றதற்கு தேவகோட்டை நகரில் உள்ள வாக்கு பதிவு மையங்கள் 40 எண்ணத்திற்கு (Election Booths) தேவையான அடிப்படை வசதிகள் குடிநீர் வசதிகள் மற்றும் மின்வசதி செய்ததற்கும் மற்றும் ஸ்டேசனரி பொருட்கள் வாங்கியமைக்கும் மொத்தம் ரூ.96,103/– செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**–தேர்தல் அவசர அவசியத்தைக் கருதி செலவினம் மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.678, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–679**

தேவகோட்டை நகராட்சியில் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 4.18 மில்லியன் லிட்டர் விநியோகிக்கப்படுகிறது. இந்நகரில் 51 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து 11 எண்ணம் உயர்மட்ட தொட்டிக்கு நீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. விநியோகிக்கப்படும் குடிநீர் தரமானதாக உள்ளதா என்றும் அவ்வப்போது சோதனை செய்யப்பட வேண்டும். இதற்கு நகரின் குடிநீர் விநியோகத்தில் பல்வேறு இடங்களில் குடிநீர் மாதிரிகள் சேகரித்து, குடிநீர் வடிகால் வாரியம் சிவகங்கை சோதனை நிலையத்தில் தரப்பரிசோதனை செய்து அறிக்கை பெறவேண்டும் இப்பணிக்கு ஒரு குடிநீர் மாதிரிக்கு ரூ.1500/– வீதம் பரிசோதனை நிலையத்திற்கு செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட பணி ஓர் ஆண்டிற்கு மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச கட்டணத்தொகை ரூ. 2,00,000/–க்கும் மன்ற அனுமதிக்கும்.

**அலுவலக்குறிப்பு–**குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.679, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–680**

தேவகோட்டை நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மூன்று ஆண்டுகளுக்கு தனியார் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.43,

நாள்.28.01.2015ல், ரூ.105.00 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை தரணி அசோசியேட்ஸ்–மதுரை நிறுவனத்திற்கு ஒப்படைத்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.223, நாள்.19.12.2015ல் அனுமதிக்கப்பட்டது. இந்நகர்மன்ற தீர்மான எண்.612, நாள்.30.11.2018ல் இந்நகராட்சியில் உதய்மின் திட்டத்தின் கீழ் அனைத்து தெருவிளக்குகளையும் ஒளிர் உமிழ் விளக்குகளாக மாற்றிடும் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணியும் மேற்கொள்ளும் திட்டத்திற்கு இறுதி திட்ட அறிக்கை TVS-SUD சௌத் ஆசியா லிமிடெட்–சென்னை நிறுவனத்தால் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது பராமரிப்பு பணி மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு 30.06.2019வரை நீட்டிப்பு செய்தும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்படி பராமரிப்பு பணி மேற்கொண்டுவரும் தரணி அசோசியேட்ஸ்–மதுரை நிறுவனத்தின் பணிக்காலம் 30.06.2019 அன்று முடிவடைகிறது. அனைத்து தெருவிளக்குகளும் ஒளிர் உமிழ்விளக்குகளாக (LEC) மாற்றும் திட்டம் தமிழக அரசால் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளதால் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் வரை தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் தரணி அசோசியேட்ஸ்–மதுரை நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள விலைவிகிதத்தின்படி 31.12.2019 முடிய மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்திடவும், இதற்காகும் கூடுதல் செலவினம் ரூ.16,00,000/– க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.680, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

(ஒப்பம்) கே.சுதா

ஆணையாளர்/தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி